மாண்புமிகு திரு. சி பொன்னையன்: தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும்தான் முன்பு சட்டக்கல்லூரி இருந்தது. தற்போது திருச்சி, கோவை, மதுரை போன்ற பகுதிகளிலும் சட்டக் கல்லூரி வைக்கப்பட்டு இருப்பதால், சென்னையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், இவர்களுக்கு அக்காமெடேசன் பெசிலிடிஸ் போன்ற பிரச்னை இருக்காது. அதைப்பற்றி அரசு தனியாக பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட சம்பந்தமாக வருகிற எல்லாவற்றையும் இந்தக் கேள்வியிலேயே கேட்டுவிட முடியாது. மூலக் கேள்வியை ஒட்டித்தான் துணைக் கேள்விகள் இருத்தல் வேண்டும். மாண்புமிகு அமைச்சர்களும் அதை ஒட்டித்தான் பதில் சொல்லவேண்டும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் உச்ச நீதிமன்றம் பில்லா, ரங்கா வழக்கை விசாரிப்பதற்காக சுப்ரீம்கோர்ட் தலைமை நீதிபதி வீட்டிலேயே கோர்ட்டை நடத்தினார். அதே போன்று மக்களின் நன்மையைக் கருதி, சென்னையிலே உச்ச நீதி மன்றத்தின் பெஞ்ச் ஒன்றை அமைக்க மத்திய அரசு முன்வருமா ? அதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் கேள்விக்கு விடையளித்து இருக்கிறேன்.

படித்த இளைஞர்களின் சுயவேலை வாய்ப்புக்கான தனி கூட்டுறவு அமைப்பு.

*வினா எண். 269—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களில் சுய வேலை வாய்ப்புக்காக தனி கூட்டுறவு அமைப்பு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) ஆம். சென்னையில் உள்ள படித்த சுயவேலை வாய்ப்புள்ள இளைஞர்களின் சங்கம் அதன் சங்கத்தின் உறுப்பினர்களுக்காக சுயவேலை வாய்ப்பு பெற வசதிகள் செய்யும் நோக்கத்துடன் ஒரு கூட்டுறவு அமைப்பினை நிறுவ முன்மொழிவுகள் அனுப்பி இருந்தது. இதனை பரிசீலித்து சென்னை நகரை விவகார எல்லையாகக் கொண்டு ஒரு கூட்டுறவு அமைப்பினை ''NASEY Cooperative Thrift and Credit Society Limited'' என்றபெயரில் இயங்க அனுமதி வழங்கப்பட்டு சங்கம் 22–10–81 அன்று பதிவு செய்யப்பட்டு, 9–11–81 அன்று அது துவக்கப்பட்டுள்ளது.

1982 பிப்ரவரி 19)

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஜப்பானில் படித்த இளைஞர்கள் அரசாங்கத்தையும் மற்றும் தனியாரையும் எதிர்பாராமல் அவர்களே தொழில் நடத்தி நாட்டையும், அவர்களையும் முன்னேற்றம் அடையச் செய்கிறார்கள். அதைப் போலவே, தமிழ்நாட்டை ஜப்பானாக மாற்றவும், செல்வம் கொழிக்கும் பூமியாக, பசி, பட்டினி, பிணி போன்றவைகள் இல்லாமல் ஆக்கவும், இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஊக்குவிப்பதன் நோக்கமே அதுதான். பரிட்சார்த்தமாக சென்னையிலே முதலிலே இந்த self-employment co-operative society அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த 3-4 மாதங்களிலே, ரூ. 4,12,000 என்கிற அளவிற்கு அந்த சொசைடிக்கு கடன் உதவி அளிக்கப்பட்டு இருக்கிறது. அது வெற்றிகரமான திட்டமாக உள்ளதால், அரசிலும், தனியாரிடத்திலும் வேலை வாய்ப்பு பெற முடியாத இளைஞர்கள் சுயவேலையில் ஈடுபடுகிற காரணத்தால், அது பல் நன்மைகளை ஈட்டும் என்ற அடிப்படையில் அதனை உற்சாகப் படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் இந்த self-employment cooperative society அமைக்கப்பட்டு, சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஊக்குவிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, படித்த இளைஞர்கள் மட்டும் தான் இந்தச் சங்கத்தில் சேருவதற்கு வாய்ப்பு உள்ளதா ? படித்த இளம் பெண்களும் இந்த சுயவேலை வாய்ப்பு சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா ? அந்தக் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேருவதற்கு என்ன விதிமுறைகள் உள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Co-operative society for self-employment of educated youth என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

(Educated youth includes women also)

நாகர்கோவில் பாதாள சாக்கடைத் திட்டம்.

* வினா எண் 270— திரு. மி. வின்சென்ட் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நாகர்கோவில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு கடைசி ஆய்வு வரைவும் முடிவுற்று, மதிப்பீடும் செய்ததற்குப் பிறகு ஓராண்டுக்கும் மேல் இதை துவங்காதிருப்பது ஏன் ?

(ஆ) உடனடியாக வேலை துவங்க அரசு வேகமாக பணிதனை மேற்கொள்ளுமா ?